Sale of milk in Madras

* 139 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether there was any increase in the off-take of milk in Madras from the Milk Project during May-June 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) அண்டு (இ) 1972 மே திங்களில் சென்னைப் பால்பண்ணைத் திட்டத்திலிருந்து பால் விற்பனை 21,35,520 லிட்டராக இருந்தது; அது 1972 ஜூனில் 21,53,716 லிட்டராக உயர்ந்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, கூட்டுறவுத் துறையில் இயங்கி வரும் பால் பண்ணையில் பாலைக் கொண்டு வந்து கொடுப்பவர்கள் தரக்குறைவான பாலைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டால், அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இன்றுள்ள சட்டப்படி அந்தக் கூட்டுறவுப் பால் பண்ணையின் தலைவர் தண்டனைக்கோ அல்லது அபராதத்திற்கோ ஆளாக வேண்டிய நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்வி சென்னை நகரத்தைப் பொறுத்தது.

திரு. என். கிட்டப்பா : நான் ஒரு கூட்டுறவுப் பால் பண்ணைச் சங்கத்தின் தலைவராக இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்வதெல்லாம், இதை மாற்றி அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கூட்டுறவுப் பால் சங்கங்களின் மூலம் சேகரிக்கப்படும் பால் கெட்டுப் போகுமானல், அந்தச் சங்கத்தின் தலைவர் அந்தச் சங்கத்திற்கு பொறுப்பு இருக்கிற காரணத்தால், அவரையே அந்தப் பால் கெட்டுப் போனதற்கும் பொறுப்பு ஏற்க வேண்டுமென்று நாம் விதிமுறைகளை வகுத்து இருக்கிறோம்.

DR. H. V. HANDE : Is it not a fact that quite a number of times we find the quality of milk from these projects are sub-standard, and recently also is it not a fact that I gave a complaint to the Hon. Minister showing that in a particular bottle of milk a

1972 டிசம்பர் 12]

rat, dead rat, was found and I had the sample also and gave a specific complaint with Depot number, etc., and is it not a fact that such complaints come quite a number of times and what steps has this Government taken or is going to take to prevent such substandard quality and the presence of dead animals in those bottles of milk?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் ஏராளமான புகார்கள் இது பற்றி வரவில்லை. 2–3 நாட்களுக்கு முன்னால் டாக்டர் ஹாண்டே ஒரு புகார் கொடுத்து இருப்பதாகச் சொன்னார்கள். அது பற்றி தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சொல்லி இருக்கிறேன். இப்படிப்பட்ட புகார்கள் வருவதைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் தற்போது பால் பாட்டில்கள் சீல் போட்டு வினியோகிக்கப்படுகின்றன. சீல் உடைபடாமல் இருப்பதற்கும் பிளாஸ்டிக் பைகளில் பாட்டல்களைப்போல் போட்டு வினியோகம் செய்யலாமா என்று யோசித்து வருகிறோம். பம்பாயில் இந்த முறையில் செய்து வருகிறார்கள். அது பற்றி நம்முடைய அதிகாரிகளும் முயற்சி எடுத்து வருகிறார்கள். அது வெற்றிகரமாக இருக்குமானால் சென்னை நகரிலும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வரலாம்.

Dr. H. V. HANDE : My presumption is that it is quite possible that in these bottles which are kept dry or empty, the rat might have entered and not come through the pipes and if so, will it not be possible to see that the bottles are kept clean so that no foreign body is in that bottle?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சுகாதாரமான முறையில்தான் அந்த பாட்டில்கள் அங்கே கழுவப்படுகின்றன. பாட்டல்களை சுத்தப்படுத்துவது, பால் நிரப்புவது, சீல் வைப்பது எல்லாமே இயந்திரங்கள் தான் செய்கின்றன. பாலை சுத்தமாகத் தான் அனுப்புகிறோம். ஆனால் இப்படி ஏதாவது ஒரு சில தவறுகள் ஒரு நாள் ஏற்படலாம். அவற்றையும் தவிர்ப்பதற்கு நாம் முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, மாவட்டத்திற்கு மாவட்டம் குழாய்கள் மூலமாகப் பால் வினியோகிக்கிற திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா ?

[1972 டிசம்பர் 12

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இல்லை.

Milk production in Dharmapuri district.

* 140 Q.—THIRU A. SUBRAMANIAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is a proposal for stepping up milk production and dairy development in Dharmapuri district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காகவும் எண்ணிக்கையைப் பெருக்குவதற்காகவும் கால்நடை வளர்ப்புத் துறையால் மேற்கொள்ளப்படும் வழக்கமான நடவடிக்கைகள் கால்நடைகளை வாங்கவும் பாலைக் கையாளவும் பால் உற்பத்தி கூட்டுறவு நிறுவனங்களுக்கு உதவுவதற்காகவும் பாற்பண்ணைத் துறையால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் தவிர, பால் உற்பத்தி வளர்ச்சிக்கான சிறப்புத் திட்டம் எதுவும் தருமபுரி மாவட்டத்தில் மேற்கொள்ளக் கருதப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் *வெள்ளிக் குறியிடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. நடைமுறைக் கேள்விகள்

(அ) பத்திரிகைகள் அவை நிகழ்ச்சிகளைக் கூட்டியும் குறைத்தும் வெளியிடுதல் குறித்து.

(ஆ) வானொலி தவறான செய்திகளைத் தருவது குறித்து.

(இ) பேரவைத் தலைவர் தீர்ப்பளிக்கும்போது ஓர் உறுப்பினர் குறிக்கிடுவது குறித்து.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்தப் பேரவையின் நடவடிக்கைகள், பேரவையின் உறுப்பினர்கள் ஈடுபட்டு நடத்தப்படுகிற விவாதங்கள் அல்லது அவர்கள் ஆற்றுகிற உரைகள் வெளியிலே பத்திரிகையிலே வருகிற நேரத்தில் ஒன்று அவைகள்